கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.56/2022

பி.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **பவானி கணேசன்** | தொழில் | |
| த/க பெயர் | **கணேசன்** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 07.03.2025 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 1 **ஆம்** பிரதிவாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தை என் முதல் நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். 29.12.2015 அன்று என் கணவர் வாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தின் சான்று நகல் தாக்கல் செய்கிறேன். அது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியிடப்படுகிறது. 15.04.2022 அன்று தினமலர் நாழிதளில் எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய மறுப்பு அறிவிப்பு தாக்கல் செய்கிறேன். அது **பி.வா.சா.ஆ.2** ஆக குறியிடப்படுகிறது. 10.04.2023 அன்று எனது கணவர் இந்த நீதிமன்றத்திற்கு வழக்கு சம்பந்தமாக அனுப்பி வைத்த வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அது **பி.வா.சா.ஆ.3** ஆக குறியிடப்படுகிறது. என் கணவர் 20.09.2023 அன்று எழுதிக்கொடுத்த உறுதி மொழி பத்திரத்தின் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டது. அது **பி.வா.சா.ஆ.4** ஆக குறியிடப்படுகிறது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.03.07 18:11:07 +0530

Additional District Judge(FAC),

Dindigul.